சுடர் 13 கதிர் 1

# மிட்ஸ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

# ஐக்கிய சுடர்

ஜனவரி - மார்ச் 2022

மும்மாத இதழ்



சிரமம் தாங்கினால்
சிகரம் உன் வசமாகும்...

ஆதரவாளர்கள்
**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. ஜாண்குமார் K.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்
**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு
**திருமதி. R. ஷகிலா**, M.S.W
**திருமதி. J. ஷீஜா**
**திருமதி. V. சுனி**
**திருமதி. A. பேபி சரோஜா**
**திருமதி. A. ஷிஜி**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
**திருமதி. P. ஜெசிந்தா**, M.S.W

வெளியீடு
**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்
**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

***********************

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

***********************

# உள்ளே ...

1. இயக்குநரிடமிருந்து ........ 3
2. அறிந்துகொள்வோம் ........ 4
3. இயற்கை ........ 5
4. கவிதை ........ 6
5. சர்வதேச பெண் குழந்தைகள் தினம் ........ 8
6. குடியரசு தினம் ஓர் கண்ணோட்டம் ........ 11
7. குழந்தைகள் தினம் ........ 12
8. சோதனைகளுக்கு துணிந்தவனே சாதனைகளுக்கு சொந்தக்காரன் ... 16
9. சிறப்பு உதவித்தொகை ........ 18
9. ஜோக்ஸ் ........ 18
10. தேடாதபோது கிடைப்பதும் தேடும்போது தொலைவதும் ........ 19
11. வழிகாட்டுதல் கூட்டம் ........ 21
12. குறுக்கெழுத்துப் போட்டி ........ 23
13. புற்றுநோயில்லா உலகம் படைத்திட ........ 25




சீரகத்தூளை வெண்ணெயில் குழைத்து சாப்பிட்டு வர எரிச்சலுடன் கூடிய அல்சர் நோய் தீரும்.



# இயக்குநரின் இதயத்திலிருந்து....

மிட்ஸ் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் இந்த ஐக்கிய சுடர் இதழ் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மனிதகுலம் நாடோடியாக வாழ்ந்த காலத்தில், பெண்ணும், ஆணும் இணைந்து வேட்டையாடி வாழ்ந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. ஓர் ஆணிடம் நிரம்பியுள்ள கல்வியறிவும் ஆற்றலும் ஒரு பெண்ணிடமும் நிரம்பியுள்ளது. பெண்களின் நெஞ்சில் உள்ள ஊக்கமும், வேகமும் ஆணின் நெஞ்சில் உள்ள ஊக்கத்துக்கும், வேகத்துக்கும் எந்தவிதத்திலும் குறைவானதல்ல. ஆணையும் பெண்ணையும் பிரிப்பது பால் வேறுபாடுகளேயன்றி மனிதமோ, இயல்புகளோ அல்ல. இருவருக்கும் ஒரே மனிதம் தான் ஒரே இயல்புதான்.

ஆண்களை துணிவு, வீரம், அறிவுடையவன் என்றெல்லாம் உயர்த்தி பேசுவதை கேட்டு வளரும் ஒரு ஆண்குழந்தை வீரமுள்ளவனாக மாறி விடுகிறான். பெண்களை அடிமைப்படுத்தும் வார்த்தைகளை தொடர்ந்து கேட்கும் ஒரு பெண் குழந்தை பணிந்து போகும் நிலைமைக்கு தள்ளப்பட்டு விடுகிறது. வீரத்தை ஆணுக்கும், கோழைத்தனத்தை பெண்ணுக்கும் இயல்பான குணங்களாக இந்த சமுதாயம் மாற்றி விட்டது.

ஆனால் உண்மை அதுவல்ல. ஆணின் பணி எந்த அளவு முக்கியமோ அந்த அளவு பெண்ணின் பணியும் முக்கியமானது. பத்து பேருக்கு உத்தரவிடும் நிலையிலும், உயர் மட்ட அளவில் முடிவுகளை எடுத்து செயல்படுத்தும் திறன் கொண்டிருந்தாலும் வீட்டில் பெண்ணுக்கு ஓய்வில்லை. "முன் எழுந்து பின் துயில வேண்டும்" என்ற கட்டுப்பாட்டுடன் தான் குடும்பத்தில் அவள் ஓடியோடி தன் கடமைகளை செய்து விட்டு அலுவலகம் செல்கிறாள். இன்று வேலைக்கு செல்லும் பெரும்பாலான பெண்களின் நிஜ வாழ்க்கை இது தான். அதிக வேலைப்பளு, கலாச்சார கட்டுப்பாடு இந்த கட்டாய திணிப்பினால் பெண்களின் உடலும் மனமும் ரணப்படுத்தப்பட்டுள்ளதே யொழிய குணமாவதில்லை.

மார்ச் 8-ம் தேதி சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாட இருக்கும் இச்சமுதாயம் பெண்கள் வேலைக்கு போய் பொருளீட்டுவதால் மட்டும் விடுதலை அடைந்து விட்டாள் என்ற பொய்மை எண்ணத்திலிருந்து விடுபட்டு பெண்களின் உழைப்பு, உழைப்பிற்கான அங்கீகாரம், மாண்பு, சுய உணர்வுகள், சுதந்திரம் பற்றிய கருத்தாக்கங்களை ஆண்களின் வரையறைகளின்று வெளிக்கொணர்ந்து மனிதம் சார்ந்த பார்வையில் வரையறைகளை வகுக்கட்டும். இச்சிறு முயற்சிகளுக்கு வாய்க்காலாக சர்வதேச பெண்கள் தினம் அமையட்டும்.

அனைவருக்கும் பெண்கள் தின நல்வாழ்த்துக்கள்.

*என்றும் அன்புடன்*

**Fr. ஜாண்குமார் .K**



# அறிந்து கொள்வோம்



1921-ம் ஆண்டு கொல்கத்தா பல்கலை கழகத்தின் பிரதிநிதியாக ஐரோப்பாவில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மாநாட்டுக்கு சி.வி.ராமன் கப்பல் பயணம் மேற்கொண்டார். அப்பொழுது இயற்கை மீதிருந்த ஆர்வம் காரணமாக வானத்தை உற்று நோக்கி கொண்டிருந்தார். தான் பார்த்த மத்திய தரைக்கடல் பகுதியின் வானம் ஏன் அவ்வளவு நீல நிறமாக காட்சியளிக்கிறது என்று சிந்தித்தார். கடலின்



நீல நிறத்திற்கான காரணம் வெறும் வானத்தின் பிரதிபலிப்பாக மட்டும் இருக்க முடியாது என்பதை உறுதியாக நம்பினார். இந்த கேள்வி அவருடைய மனதில் ஆழப் பதிந்தது. இதற்காக பின்னாளில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

ஆராய்ச்சிகளின் முடிவில் ஒளி ஊடுருவக் கூடிய ஊடகம் திடப்பொருளாகவோ, திரவப் பொருளாகவோ அல்லது வாயுப் பொருளாகவோ இருக்கலாம். அந்த ஊடகங்களில் ஒளி செல்லும் போது அதன் இயல்பில் ஏற்படும் மாறுதல்களின் காரணமாக "ஒளியின் மூலக்கூறு சிதறல்" ஏற்படுகிறது என்ற உண்மையை கண்டறிந்தார். தண்ணீரில் உள்ள மூலக்கூறுகளால் சூரிய ஒளிச்சிதறல் ஏற்பட்டு கடல் நீல நிறமாக காட்சியளிக்கிறது என்று கண்டுபிடித்தார். இந்த சிறப்பான ஆய்வுக்கு தான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவர் தனது ஆய்வின் போது வண்ணப்பட்டை நிழற்பதிவு கருவியை (Specto Graph) பயன்படுத்தினார். சூரிய ஒளியை பல்வேறு ஊடகங்களின் வழியே செலுத்துவதன் மூலம் நிறமானியில் சில புதிய வண்ண வரிகள் தோன்றுவதை அவர் கண்டார். அவை ராமன் வரிகள் என்றும் அவருடைய கண்டுபிடிப்பு "ராமன் விளைவு" என்றும் அழைக்கப்பட்டது.

1928-ம் ஆண்டு சி.வி. ராமன் அவர்கள் கண்டுபிடித்த இந்த ராமன் விளைவு உலகளாவிய கவனத்தை ஈர்த்தது. ராமனின் இந்த கண்டுபிடிப்பு மற்ற உலக புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்களால் அங்கீகரிக் கப்பட்டது. தனது ஒளி விளைவு கோட்பாட்டை உறுதி செய்வதற்காக ராமன் லேசர் ஒளியை பயன்படுத்தியதன் மூலம் பின்னாளில் நாம் பயன்படுத்தும் கணினியுடன் கூடிய ஸ்பெக்ட்ரோ மீட்டர் கண்டுபிடிக்கப்பட்டு இயற்பியல், வேதியியல், நுண்ணுயிரியியல், உயிர் வேதியியல், மருந்து உற்பத்தி தொழில் நுட்பம் முதலான அறிவியல்சார் ஆராய்ச்சிகளுக்கு பயன்பட்டு வருகிறது. ஒரு அறிவியலாளரின் பயணமும், சிந்தனையும் பெரும் புரட்சி செய்ததனால் தான் இன்று நாம் தேசிய அறிவியல் தினம் கொண்டாடுகிறோம். மேலும் இவர் கண்டுபிடித்த ராமன் விளைவு 1930-ம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை பெற்றுத் தந்தது.

இந்தியாவில் படித்து, இந்தியாவில் ஆராய்ந்து நோபல் பரிசு பெற்ற முதல் இந்திய அறிவியல் ஹீரோ சி.வி.ராமன் தான். இவர் கண்டுபிடித்த ராமன் விளைவை உலகுக்கு அறிவித்த நாள் பிப்ரவரி 28. எனவே தான் அந்த நாள் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது. தேசிய அறிவியல் தொழில்நுட்ப பரிமாற்றக்குழு 1986-ம் ஆண்டு இந்த தினத்தை அறிவித்தது. அறிவியலை பரப்புவதற்காக, நாட்டில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்கள், தனிநபர்களுக்கு அறிவியல் பரப்புதலுக்கான தேசிய விருதும் இந்நாளில் வழங்கப்பட்டு வருகிறது.

*T. **அஜிஷா**, மாத்தூர்கோணம்*



முள்ளங்கியை வேக வைத்து அந்த நீரை தொடர்ந்து குடித்து வர சிறுநீரக கற்கள் கரையும்

# தோள்(ல்) பை

**தி**ருநெல்வேலிக்கு வேலைக்கு போகத் தொடங்கிய
நாள் முதலே என்னோடு ஒட்டிக் கொண்டது
ஒட்டுண்ணியாய் தோள்(ல்) பை..... !

என் நெடிய பிரயாணங்களில்
துணை வரத் தொடங்கியது.....
துவக்கத்தில் எரிச்சலாய் தோன்றும்
நாளனதில் தவிர்க்க முடியாமல் தவித்தேன் !

ரயிலுக்காய் நான் ஓடும் போது.....
பிரிய நாய்க்குட்டியாய்.....
பின்னோடும் என்னோடு!

என் உணவை, புத்தகங்களை சுமக்கும்.....
ரயிலில் எழுத, படிக்க மேஜையாய் மாறும்
அசதியில் தலை சாய்க்க
தலையணையாய் மடியேந்தும்...... !

வேலை என்னை உதறிய போது....
பையும் வீழ்ந்து போனது.....
மெதுவாக அலமாரிக்குள் அடைக்கலமானது...... !

பையை பார்க்க மனமில்லாமல்
வெகுநாள் தவிர்த்தேன்...... !
ஆனாலும் என் சின்னஞ்சிறு
பொக்கிஷங்களெல்லாம்
இன்னமும் அதற்குள் தான்..... !

நீண்ட நாளுக்குப்பின் தேடினேன்...... !
படுக்கை வயசாளியாய் நொடிந்து கிடந்தது...... !
மெல்ல பற்றினேன்........துழாவினேன்.......
அணைத்துக் கொண்டேன்........

கலங்கிய என் கண்களின் வலி அறியா
உயிரற்ற ஜீவனல்லவா என் பை...... !

**லீலா பாய்**
வண்டங்கனாவிளை சுய உதவி குழு

# இயற்கை



நெடுங்காலமாக தனிமையில்
காத்துக் கொண்டிருக்கும் ஒரு காதல்.....

யாரும் தன்னை துயிலெழுப்பாவிடினும்
அதிகாலை எழுந்து தன்
காதலியை தேடுகிறது சூரியன்.......

நிலவும் அது போல தன் வீட்டில்
யாருக்கும் தெரியாமல் கனவில் தன்
காதலனை சந்திக்க வருகிறது.......

இருவரும் ஒன்றோடொன்று சந்திக்க
முடியவில்லை
அது தான் அவர்கள் விதியா என்று
தெரியவில்லை
இந்த கொடுமையை கேட்ட ஒருவர்
கவலையில் அழுகின்றார் (மழை)........

சிறு குடிசை வீடுகள் கூட இல்லாத குருவிக்கு
இங்கு மரங்களெல்லாம் இயற்கை
குடையாக அமைந்து விட்டன......

வானத்தில் கிழித்து வீசப்பட்ட வெள்ளை
காகிதங்கள் (மேகங்கள்)
எல்லாம் ஆங்காங்கே உயிரற்ற
உருவங்களாக உருவெடுக்கின்றன........

பசுமை தொடர்ந்திட, வறுமை மறைந்திட
இயற்கையினை நேசித்து
இயற்கை காற்றினை சுவாசித்து
வாழ்ந்திடுவோம் வளமுடன்...........!


**திருமதி. சுனி,**
*ஒருங்கிணைப்பாளர், மிட்ஸ் உறுப்பினர் நல திட்டம்*

## நட்பு



பல நேரங்களில் விட்டு
கொடுப்பது மட்டுமல்ல...
சில நேரங்களில் தட்டி
கொடுப்பதும் தான்
நட்பு.

## நிழல்



**ஏ**ன் என்னோடு
நகர்கிறாய் என்று
என் நிழலைக்
கேட்டேன்
அதற்கு அது சிரித்துக் கொண்டே
என்னைத் தவிரவேறு
எவரும் - உன்னோடு
கடைசி வரை வருவதில்லை என்றது.

***திருமதி. பேபி சரோஜா***
*அமைப்பாளர், ஆற்றூர் கிளஸ்டர்*

## சுமைகள்

*அபிஷா. P.M.*

**ப**ள்ளி முதல் கல்லூரி வரை புத்தகத்தின் சுமை
பின் பட்டத்தை தூக்கி வேலை தேடும் சுமை
பின் திருமணத்தின் சுமை
பின் குழந்தைகளின் சுமை
பின் பேரன் பேத்திகளின் சுமை
பின் எப்பொழுது ஓய்வு எடுக்கலாம்
என்று நினைத்தார்களோ அப்போது
நோய்களின் சுமை

## மழை



**மா**லை மயங்கும் நேரத்தில்
மேகத்தின் கருவிழிகள்
இந்த பூமியை நோக்கி வட்டமிட......
சீரிய காற்றுடன் கூடவே
ஒய்யாரமாய் வீசும் சூறைக்காற்றின் சத்தம்.....
எழுப்பும் இடி மின்னல்களின் இடையே
விண்ணை பிளந்து மண்ணிற்கு உதயமாகும்
எங்கள் காக்கும் தெய்வம் மழைக்கு
கோடி கோடி நன்றிகள்...

## நட்பின் பயணம்



**யா**ர் என்று கூட தெரியாதிருந்தும் என்னிடம்
பேனா இல்லை என்று கேட்டவுடன் எனக்கு
நீ உதவிய அன்றே ஆரம்பித்து விட்டது
நட்பின் பயணம்.....
நாங்கள் எதிரெதிரே பார்த்து தான்
பழகினோம் ஆனால்
எதிர்பார்க்காமல் பழகினோம்
உயிர் நண்பர்களாய்......
பள்ளி பருவத்தில் காகிதம் மடித்து
கப்பல் செய்து விளையாடிய
நினைவுகளெல்லாம் இன்றும்
காவியம் போல் மனதில்
ஓடிக் கொண்டிருக்கிறது.... ஒரு வேளை
அனைவரும் ஒரு தாயின்
வயிற்றிலிருந்து பிறக்க
இடம் இல்லாததால் தான் வெவ்வேறு
அம்மாக்களின் வயிற்றில்
இருந்து பிறந்தோமோ .....




# வஞ்சனை உள்ளம்

முகத்திரை கிழிந்திடினும்
விழித்திரை மூடிநின்று
பிறர்நிலை நகைக்கும்
அற்பப்பிறவி - நீயோ

**T.அஜிஷா**
*மாத்தூர்கோணம்*

## ஊர்களும் அதன் சிறப்புகளும்

| | |
|---|---|
| திருநெல்வேலி | - அல்வா |
| கோவில்பட்டி | - கடலை மிட்டாய் |
| மானாமதுரை | - மல்லிகை |
| பழனி | - பஞ்சாமிர்தம் |
| திருப்பதி | - லட்டு |
| திண்டுக்கல் | - பூட்டு |
| மார்த்தாண்டம் | - தேன் |
| நாகர்கோவில் | - வாழைக்காய் சிப்ஸ் |
| கும்பகோணம் | - வெற்றிலை |
| சேலம் | - மாம்பழம் |
| சிவகாசி | - பட்டாசு |
| ஈரோடு | - மஞ்சள் |
| ஊட்டி | - தேயிலை |
| பொள்ளாச்சி | - தேங்காய் |
| நீலகிரி | - தைலம் |




தடுக்கி விழுந்தால் அ..........ஆ
சிரிக்கும் போது மட்டும் இ ..........ஈ
சூடுபட்டால் மட்டும் உ...........ஊ
அதட்டும் போது மட்டும் எ..........ஏ

ஐயத்தின் போது மட்டும் ஐ
ஆச்சரியத்தின் போது ஒ.......ஓ
வக்கணைப்பின் போது ஔ
விக்கலின் போது ஃ

என்று தமிழ் பேசி
மற்ற நேரங்களில் வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்லுங்கள்

உங்கள் தாய் மொழி
தமிழ் என்று

• அபிஷா P.M. •

# சர்வதேச பெண் குழந்தைகள் தினம்



**"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"** என்ற கவிமணியின் வரிகளும் **"சட்டங்கள் ஆள்வதும், பட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"** என்ற பாரதியின் வரிகளும் பெண் குழந்தைகளின் சிறப்பையும், ஆளுமையையும் எடுத்துச் சொல்கின்றன. ஆண்டுதோறும் இந்தியாவில் 2009-ம் ஆண்டு முதல் ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.




### இந்நாளின் நோக்கம்

- பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்
- சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கான சம உரிமையை வழங்குதல்
- பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனை களை தடுத்தல்
- அவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்தல்

### இல்லத்தோரின் அச்சாணி - பெண்கள்

பெண் குழந்தைகள் இல்லத்திற்கு அச்சாணியாக இருந்து, மகிழ்ச்சியையும், அன்பையும் உருவாக்கும் நீரூற்றுகளாக இருக்கிறார்கள். குடும்ப வறுமையை போக்குவதில், அப்பாவுக்கு தோளோடு தோளாக நின்று வேலைக்கு செல்லக்கூடிய பெண்களும் இருக்கிறார்கள். பெண்கள் இல்லாத வீட்டில் லெட்சுமி தங்க மாட்டாள் என்று சொல்வார்கள். பெண் குழந்தைகள் இல்லாத இல்லத்தில், இல்லத்தரசியின் பாடு திண்டாட்டம் தான்.



எனக்கொரு மகள் இருந்தால் ஒத்தாசையாக, உதவியாக இருந்திருப்பாளே என்ற புலம்பல்களை கேட்டிருக்கிறோம். உழைத்து அலுத்து சோர்வாய் வரும் தந்தையை பார்த்து "ஏம்ப்பா' உடம்பு சரியில்லையா? காபி போட்டு தரட்டுமா? என்று கேட்கும் பெண் குழந்தைக்கு மேல் இந்த உலகத்தில் வேறு என்ன இருக்கப் போகிறது.

### கல்வியில் சிறந்த பெண்கள்

"கல்வி அறிவிலா பெண்கள் களர்நிலம்
அந்நிலத்தில் புற்கள் விளைந்திடலாம்
நல்ல புதல்வர்கள் விளைவதில்லை" என்று பாரதிதாசன் கூறிய வரிகள் இப்போது பொய்த்து போகும் அளவிற்கு பெண்கள் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். பிறந்தவுடன் கள்ளிப்பாலும்,


இலந்தைபழம் சாப்பிடுவதால் பித்தம் சம்பந்தமான நோய்கள் தீரும்

கருக்காய் நெல்லும் கொடுத்து அழித்த பிசாசுகள் ஒழிந்து விட்டது. பெண் குழந்தைகளை தாயே! என்றும் அம்மா என்றும் ராஜா என்றும் அழைக்கும் இளம் தலைமுறை பெற்றோர்கள் பெருகி விட்டனர். **"தெய்வத்தின் வரத்தால் ஆண் குழந்தை பெற்றேன்"** என்பது அந்தக்காலம். **"தெய்வமே எனக்கு மகளாக கிடைத்திருக்கிறாள்"** என்று துள்ளிக் குதிப்பது இந்தக்காலம்.



### பெண் குழந்தைகள் எதிர் கொள்ளும் சவால்கள்

- குழந்தை திருமணங்கள்
- கல்வியின்மை
- பெண் சிசுக்கொலை
- வரதட்சணை கொடுமை
- பெண் குழந்தை தொழிலாளர்கள்

என பட்டியலிட்டு கொண்டே போகலாம். பெண் சிசுக்கொலையும், பெண் கல்வி மறுப்பும், வரதட்சணை கொடுமைகளும் பல இடங்களில் இன்னும் அரங்கேறி கொண்டிருப்பது வேதனைக் குரிய விஷயமாக உள்ளது. பெண்ணாய் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றை எதிர்த்து போராடி வாழ்க்கையில் முன்னேற வேண்டும். ஆணுக்கு பெண் சரிநிகர் என்ற எண்ணம் எப்போதும் அவள் மனதில் இருக்க வேண்டும். தன் உரிமையை எதிர்த்து துணிவுடன் போராட வேண்டும்.



கண்ணீர் துடைப்பதும் பெண்....
கண்ணீர விடுவதும் பெண்...
கண் இமை போல் காப்பதும் பெண்...
கண்மணியே என்று கொஞ்சுவதும் பெண்...
கனிவோடு உபசரிப்பதும் பெண்...
கண்மூடித்தனமாய் நம்புவதும் பெண்...
கணக்கு போட்டு வாழ்வதும் பெண்...
சாதிக்க துடிப்பவளும், சாதனை படைப்பவளும் பெண்...



### குழந்தை திருமணங்களால் சிதையும் எதிர்காலம்

உலகம் முழுவதும் நடக்கும் குழந்தை திருமணங்களால் பாதிக்கப்படும் சிறுமிகளில், மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவைச் சேர்ந்த சிறுமிகள் என்கிறது யூனிசெப் நிறுவனம்(ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்) குழந்தை திருமணங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்படாவிட்டால் 2050-க்குள் நூறு கோடி சிறுமிகள் குழந்தை திருமணத்தால் பாதிக்கப்படுவார்கள் என்ற அதிர்ச்சி தகவலை தருகிறது அந்த நிறுவனம்.

இந்தியாவின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழகத்தில் பெண்களின் நிலை உயர்ந்திருக்கிறது என்று யூனிசெப்பின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் சமூக, பொருளாதார காரணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை தமிழக பெண்கள் அடைந்திருக் கின்றனர் என்று சொல்லலாம். ஆனால், தமிழகத்தில் கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி

போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் குழந்தை திருமணங்களின் எண்ணிக்கையில் பெரிய மாற்றம் எதுவும் நடக்கவில்லை. கிருஷ்ணகிரி இதில் முதல் இடத்தில் இருக்கிறது. அடுத்தடுத்த இடங்களில் தருமபுரி, சேலம், நாமக்கல் போன்ற மாவட்டங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் 24 சதவீதம் பெண்களுக்கு 18 வயதிற்கு முன்பே திருமணம் நடக்கிறது என்று தெரிவிக்கிறது யூனிசெப்பின் அறிக்கை.



தமிழகத்தில் கிராமப்புறங்களில் நடக்கும் குழந்தை திருமணங்களின் எண்ணிக்கை 25.5 சதவீதம் என்றால் நகரங்களில் அது 21.4 சதவீதமாக இருக்கிறது.

### பெண் குழந்தைகளுக்கான ஆன்லைன் போர்டல்

பெண் குழந்தைகளின் இளம் பருவ பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்களுக்கு எதிரான வன்முறை கொடுமைகளை தடுக்கவும், வளர் இளம் குழந்தைகளின் வளர்ச்சி முன்னேற்றத்திற்கான தேசிய தகவல் துறை ஒத்துழைப்புடன் ஆன்லைன் போர்டல் ஒன்றை மத்திய அமைச்சகம் தொடங்கியுள்ளது. இது வளர் இளம் பெண் குழந்தைகளுக்காக அவர்களின் உடல் நலன், ஆரோக்கியம், தனித்திறமை, சிக்கல்களை எளிதில் தீர்ப்பது தொடர்பான அனைத்து தகவல்களையும் முறைப்படி வழங்கும்.

### வீர மங்கைகளாய் விதியினை வென்றிடுவோம்

ஜாக்கெட் தைக்கும் பெண்கள் முதல் ராக்கெட்டில் செல்லும் பெண்கள் வரை அனைவரும் தன்னம்பிக்கை கொண்ட சிங்கங்களாக மாறி வருகின்றனர். மது அருந்தினான் என்பதற்காக மணமேடையில் மணமகனை வேண்டாமென்று தூக்கி எறிந்த பெண்கள் இருக்கிறார்கள். **"முதுமையில் இருக்கும் என் பெற்றோர்களை நான் தான் பராமரிப்பேன்"** என்று மணமகனிடம் சொல்லக் கூடிய துணிச்சல் இன்றைய பெண்களுக்கு உண்டு. குடும்ப வாழ்க்கையில் தனக்கும், தனது குடும்பத்தார்க்கும் அவமானம் என்றால் கணவனை தட்டிக் கேட்கும் பெண்கள் வளர்ந்து வருகிறார்கள். **"கற்பு நெறியென்று சொல்ல வந்தால்- அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்"** என்ற பாரதியின் வரிகளை பின்பற்றி தவறு செய்யும் ஆண்களை தூக்கி எறியவும் தயங்காத பெண்களும் இருக்கின்றனர். இந்த சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தில் பெண் குழந்தைகளை போற்றுவோம், புதிய உலகை படைப்போம்.

*திருமதி.* **R. ஷகிலா**
*அமைப்பாளர், பனச்சமூடு கிளஸ்டர்*

## ஆளும் பேச்சும்

| | |
|---|---|
| ஆசிரியர் | - அடித்து பேசுவார் |
| ஆட்டோ டிரைவர் | - சுத்தி வளைத்து பேசுவார் |
| ரைஸ் மில் நிறுவனர் | - Nice ஆ பேசுவார் |
| கிரிக்கெட் பிளேயர் | - Over ஆ பேசுவார் |
| செவிலியர் | - Syrup ஆ பேசுவார் |

• அபிஷா P.M. •


பிரண்டை உடைந்த எலும்புகளை ஒட்ட வைக்கும் தன்மை கொண்டது

# குடியரசு தினம் ஓர் கண்ணோட்டம்



இந்தியாவில் சுமார் 200 நூற்றாண்டுகளுக்கு மேல் நீடித்து வந்த ஆங்கில ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல புரட்சிகளையும் அகிம்சை வழியில் பல போராட்டங்களையும் நிகழ்த்தி தங்களுடைய குருதியையும், உயிரையும் நம் தாய் நாட்டிற்காக அர்ப்பணித்த புரட்சி தலைவர்களை நினைவு கூரும் தினம் தான் குடியரசு தினம்.




மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவரே ஆட்சி செய்யும் முறையே குடியாட்சி. இந்திய அரசியலமைப்பு சட்டம் 1950 -ம் ஆண்டு ஜனவரி 26-ம் நாள் செயலாக்கத் திற்கு வந்து இந்தியா குடியரசு நாடாக மாறியது. இந்த நாளையே நாம் குடியரசு தினமாக கடைபிடிக்கிறோம்.

இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத்.

எழுத்துரிமை, பேச்சுரிமை, வாழ்வுரிமை எல்லா மக்களுக்கும் உண்டு என்பதே குடியாட்சியின் சிறப்பாகும்.


இந்தியாவில் சாதி, மதம், இனம், மொழி என பல வேறுபாடுகள் இருந்தாலும் அனைவரும் இந்தியர் என்பதில் பெருமை கொள்ளுவோம். சுதந்திர காற்றை சுகமாய் சுவாசிப்போம்.

திருமதி. சுகுமாரி
அமைப்பாளர், பூதப்பாண்டி கிளஸ்டர்



# குழந்தைகள் தினம்

முதல் பரிசு பெற்ற கட்டுரை




அர்ஷா S.S.
வகுப்பு XII, வெட்டுக்குழி தளிர்கள் உலகம்

**வெள்ளை உள்ளமும் வெல்லப் பேச்சும்**
**பிள்ளை குணமும் கொண்டவராம்**
**ரோஜா தோட்டத்து மழலைக் கூட்டத்தின்**
**ராஜாவெனவே வாழ்ந்தவராம்**

இந்தியாவின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த மாந்தருள் மாணிக்கமாம் ஜவஹர்லால் நேரு பிறந்த நாளை குழந்தைகள் தினமாக நாம் கொண்டாடு கிறோம். உலகிலேயே அதிக எண்ணிக்கையில் குழந்தைகளை கொண்டுள்ள நாடுகளில் முக்கியமானதாக இருப்பது இந்தியா. அன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் மீது நேருவும், நேரு மீது குழந்தைகளும் அளவு கடந்த அன்பு வைத்திருந்ததால் தான் அவரது பிறந்த நாளை இன்றும் நாம் குழந்தைகள் தினமாக கொண்டாடி வருகிறோம். அவரது புகைப்படங்களில் குழந்தை களோடு அவர் இருக்கும் படங்களே சிறந்த புகைப்படங்களாக வருணிக்கப்படுகின்றன.

## சர்வதேச குழந்தைகள் தின விழா

சட்டென இளகி விடும் மனம் படைத் தோரை குழந்தை மனம் கொண்டவன் என்று தான் நாம் அனைவருமே கூறுவோம். 1925-ம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற குழந்தைகள் நல்வாழ்வு தொடர்பான சர்வதேச மாநாட்டில் குழந்தை களுக்கான அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்களுக்கான கல்வி உறுதி குறித்து அரசுகளுக்கு அறிவுறுத்தபபட்டது. 1954-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபை சர்வதேச குழந்தைகள் தினம் என்ற ஒரு கருத்தாக்கத்தை ஏற்றுக் கொண்டு இன்று பல்வேறு நாடுகளிலும், பல்வேறு தேதிகளில் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.




## குழந்தை மனம் கொண்ட நேரு மாமா

நவீன இந்தியாவின் சிற்பியுமாம்
குழந்தைகள் கொஞ்சும் மாமாவாம்
பண்டிதர் நேரு பிறந்தநாளில்
குழந்தைகள் கூட்டத்தை வாழ்த்திடுவோம்.

1889 நவம்பர் 14-ம் தேதியன்று அலகா பாத்தில் பிறந்தவர் ஜவஹர்லால் நேரு. பிரதமராக நேரு இருந்த போது, நாடு முழுவதும் உள்ள குழந்தைகள், இளைஞர்களின் நல்ல உடல்நிலை, கல்வி, முன்னேற்றம் குறித்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினார். தொடர் பணியின் இடையே, குழந்தைகளுடன் உரையாடுவதை வழக்கமாகவே கொண்டிருந்தார் நம் நேரு.

ஜவஹர்லால் நேரு, அரசியல் துறையில் தேர்ச்சியும் அனுபவமும் எத்தனை பெற்றிந்தாலும், உள்ளத்தால் குழந்தை மனதுடனே இருந்ததால் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் அதிக ஈடுபாடு காட்டினார். குழந்தைகளுக்கு சரியான முறையில் கல்வி போதிக்கப்பட,

வளர்ச்சிக்கு வித்திட வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். அதனால் தான் இன்றும் நம் நாட்டு குழந்தைகள் அவரை நேரு மாமா என அன்போடு அழைக்கின்றனர்.

## நேருவும் குழந்தைகளும்

குழந்தைகளே, அன்பு குழந்தைகளே
ஒன்று சேருங்கள்
இந்நாளிலே இது நம் தின விழா



பாரத நாட்டின் பிரதமராக திகழ்ந்த நேரு அவர்கள் நம் நாட்டு மக்களிடம் பேரன்பு கொண்டிருந்தார். குழந்தைகளிடம் அவர் கொண்டிருந்த பேரன்பு அளவிட முடியாதது. இதனை உணர்த்தும் வகையில் தன் பிறந்த நாளாகிய நவம்பர் 14-ம் தேதியை குழந்தைகள் தினமாக கொண்டாடச் செய்தார். இவர் குழந்தைகளிடையே இருக்கும் போது தம் கவலையனைத்தையும் மறந்து விடுவார். **"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது"** என்ற பழமொழிக்கு ஏற்றாற் போன்று குழந்தைகளுக்கு நல்ல கருத்துகளை எடுத்துச் சொல்லி வளர்க்க வேண்டும்.

குழந்தைகள் மத்தியில் பெற்றோர்களும் குழந்தைகளாக மாறினால் தான் நாளை அவர்கள் வெற்றியாளர்களாக மாற முடியும். கட்டுப்பாடுகளுடன் வளர்த்தால் தான் குழந்தைகள் நன்றாக வளர்வார்கள் என்று பல பெற்றோர்கள் நினைக்கிறார்கள். ஆனால் குழந்தைகளை சுதந்திரமாக விட வேண்டும் என்பதே நேரு அவர்களின் அறிவுரையாக இருந்தது.

## குழந்தைகள் தினத்தில் என்ன செய்யலாம்?

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை.

ஆம், எதிர்கால இந்தியாவின் தூண்களாகிய நாம் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையோடும், ஒற்றுமை உணர்வோடும் சாதனையாளர்களாக வாழ வேண்டும். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்ற சொல்லில் உள்ள உண்மையைத் தெளிவுபடுத்துவதற்காகத் தான் குழந்தைகள் தினத்தன்று பள்ளிகளில் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப் போட்டி என பல போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவை அனைத்தும் மாணவர்கள் மேற்பார்வையிலேயே நடைபெறும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டியாக நின்று பணியாற்றுவர். இதனால் மாணவர்களுக்கு இளம் வயதிலேயே செயலாற்றும் திறமை வளரும்.



மனிதன் பேராற்றல் மிக்கவன் என்பதை உணர்ந்து கொண்டவர்கள் அரும் பெரும் செயல்களில் ஈடுபடுகிறார்கள். செயற்கரிய செயல்களை செய்ய வேண்டும் என்று பாடுபடுகிறார்கள். அவர்கள் நடந்து செல்லும் பாதை இருள் பூசிய காடாக இருக்கலாம். ஒளி பாய்ந்த பாலைவனமாக இருக்கலாம். கருமேகங்கள் கட்டித் தழுவி உறவாடும் மலைமுகடாக இருக்கலாம். வான நிலாவை கைத்தொடத் தாவி வரும் அலைகடலாக இருக்கலாம். இது தான் பாதை, இது தான் பயணம் என்று சிரமங்களோடு உறவாடிக் கொண்டே செல்கிறார்கள். தூரத்தே தென்படும் ஒளிமயமான காலம் விரைவில் வந்து விடும் என்ற நம்பிக்கை அவர்களை இயக்கி செல்கிறது. இரணம் தப்பினால் மரணம் என்றாலும் அவர்கள் அஞ்சுவதில்லை இது தான் தன்னம்பிக்கை. ஆம் மாணவ செல்வங்களே தன்னம்பிக்கை நம் வாழ்க்கையில் முக்கியமான ஒன்றாகும். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், எந்த போட்டியாக இருந்தாலும் வெற்றியோ, தோல்வியோ தன்னம்பிக்கையோடு கலந்து கொள்ள வேண்டும்.

**இதுவும் கல்வி தான்**

உலகம், இந்த உலகம் பரந்து விரிந்தது
படைப்போம் பற்பல சாதனைகள்
நமது வாழ்விலே

நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்குவது. குழந்தைபருவத்தில் கற்றுக் கொள்ளும் விஷயங்கள் தான். குழந்தை பருவத்தில் நல்ல பழக்கங்களை கற்று கொடுக்க பெற்றோர்கள் முன்வர வேண்டும். வெறும் புத்தகங்கள் மட்டுமே சிறந்த கல்வி என்ற மனநிலை மாறி தங்கள் குழந்தைகளை, மற்ற குழந்தைகளுடன் பழக விட வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு இடையே சகோதரத்துவம், உதவும் மனப்பான்மை போன்றவை வளரும். அதுவும் ஓர் கல்வி தான் என உணர வேண்டும்.



முன்னேறு, முன்னேறு என மனம் ஓயாமல் ஊக்குவிக்க, கால்களில் ஒட்டியிருக்கும் இரும்பு சங்கிலிகளை இலவம் பஞ்சுகளாக எடுத்தெறிந்து வெற்றியாளர்களின் பயணம் கம்பீரமாக தொடரும். **"முயற்சி செய்தால் முன்னேறலாம்"** என்பது தன்னம்பிக்கையாளர்களின் மனத் திரையில் எழுதி வைத்த ஓவிய வாசகம். தன்னம்பிக்கையும், நண்பர்களும், ஒரு குழந்தையின் வாழ்வில் இருக்க வேண்டிய விஷயங்கள் ஆகும். **"இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்"** என்பதை பெற்றோர்களும் ஆசிரியர்களும் உணர வேண்டும்.

**இவர்கள் குழந்தைகள் இல்லையா?**

இன்று நாடு முழுவதும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வந்தாலும், இந்தியாவில் குழந்தை தொழிலாளர்களும் அதிகரித்து வருவதாக கூறுகிறது ஆய்வுகள். குழந்தை தொழிலாளர்கள் இன்றி அனைத்து குழந்தைகளுக்கும் அடிப்படை கல்வியும், அனைத்து



உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்பதே குழந்தைகள் தின விழாவின் நோக்கம்.

**படித்தால் மட்டும் போதுமா?**

**"இன்றைய குழந்தைகள் நாளைய கண்ணின் மணிகள்"** என்றும் நாட்டின் எதிர்காலம் இளைஞர்களிடம் தான் உள்ளது என்றும் பெரியோர்கள் பாராட்டுவதை கேள்வி பட்டிருக்கிறோம். நாளைய இளைய தலைமுறைகளாகிய இன்றைய குழந்தைகளின் நிலை எப்படி இருக்கிறது என 2009-ல் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒரு ஆய்வு எடுக்கப்பட்டது. பெரும்பகுதி நகர்ப் புறங்களிலும், சில கிராமப்புறங்களிலும் பள்ளிக்கு செல்லும் 40 ஆயிரம் குழந்தைகளிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பொல்லோ மருத்துவமனை நடத்திய இந்த ஆய்வில் குழந்தைகளின் உடல்நலன் குறித்த முடிவுகள் அதிர்ச்சி அளிப்பதாக இருந்தன.



நகரமயமாகிய நிலை, மாறி வரும் வாழ்க்கை முறைகள், புதிய உணவு பழக்கவழக்கங்கள், தொழில் நுட்ப வளர்ச்சியின் தாக்கம், இயந்திர மயமாகிப் போன வாழ்க்கை முறை போன்ற காரணங்களால் இந்தியாவின் குழந்தைகள் ஆரோக்கியம் இல்லாமல் வளருகிறார்கள் என இம்முடிவு கூறுகிறது.

**"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்"**

என்ற முன்னோரின் பழமொழிகள் சாதாரணமானவை அல்ல எனவே குழந்தைகளுக்கு நற்பண்புகளை இளம் வயதிலேயே கற்றுத் தர தொடங்க வேண்டும். தற்போதைய உலக மய சூழலில் தங்கள் பிள்ளைகளின் பண்பு



நலன் மேம்பாடு குறித்து பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயல்படுகிறார்கள். திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றின் தாக்கங்களால் குழந்தைகள் எதிர்மறையாக அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவலையும் பெற்றோர்களுக்கு உள்ளது.

குழந்தைகளுக்கு சிறந்த பண்புகளை கற்றுத் தரும் கடமை பெற்றோர்களை போலவே ஆசிரியர்களுக்கும் உண்டு என்பதை மறுத்தலாகாது. பல குழந்தைகள் ஆசிரியர்களை தங்களின் முன்மாதிரி ஆளுமைகளாய் எடுத்துக் கொள்கின்றனர். ஒரு நான்கு வயது குழந்தை தன் தாய் மற்றும் ஆசிரியையின் செயல்களையே அதிகம் பின்பற்றுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளின் வருங்காலம் சிறப்படைய வேண்டுமெனில் நேரு போன்ற ஆன்றோர்களின் வாழ்க்கை சிறந்த எடுத்துக் காட்டாய் அமைய வேண்டும். ஜவஹர்லால் நேருவைப் போல வாழ்வில் பல நிலைகளிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காகவே குழந்தைகள் விழா கொண்டாடப்படுகிறது. எல்லோரிடமும் அன்பு பாராட்ட வேண்டும் என்பதே இவ்விழாவின் உள்ளர்த்தமாகும்.

**எதிர்கால பாரதம் வடிவமைக்க**
**நல்ல குணங்களை திறன்களை**
**வளர்த்திடுவோம்**



# சோதனைகளுக்கு துணிந்தவனே சாதனைகளுக்கு சொந்தக்காரன்...




**உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.....**

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் இவை மூன்றும் ஓர் இளைஞனுக்கு தேவை என்றும் சாதிக்க இயலாத காரியம் என எதுவும் இருப்பதாக ஒரு இளைஞன் நினைக்க கூடாது என்றும் வாழ்க்கைக்கு தேவையான நல்ல அறிவுரைகளை தந்தும், அதைப் போன்று வாழ்ந்தும் காட்டியவர் சுவாமி விவேகானந்தர். இவர் சிறு வயதிலேயே இந்து சமய கொள்கை களில் அதீத ஈடுபாடும், பகுத்தறிவு பெற்ற சிந்தனைவாதியாகவும், தத்துவ புலமையும், சேவை மனப்பான்மை மிக்கவராகவும் காணப்பட்டார்.

சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவாற்ற வெவ்வேறு ஊர்களுக்கு செல்வது வழக்கம். அப்படியாக ஒரு முறை அமெரிக்காவில் ஒரு ஊரில் தங்கியிருந்தார். அங்கு ஒரு நீரோடையும் பாலமும் இருந்தன. ஒரு நாள் சுவாமி விவேகானந்தர் நீரோடை கரையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அங்கு இளைஞர்கள் சிலர், முட்டையோடுகளைத் துப்பாக்கியால் குறி வைத்து சுடுவதற்குப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் முட்டையோடுகளை ஒரு நூலில் கட்டி, நீரோடையில் மிதக்க விட்டிருந்தார்கள். அந்த நூல் நீரோடை கரையிலிருந்த சிறிய ஒரு கல்லில் கட்டப்பட்டிருந்தது. நீரோடை நீரின் அசைவுக்கு ஏற்ப, நூலில் கட்டப்பட்டிருந்த முட்டையோடுகள் இலேசாக அசைந்து கொண்டிருந்தன.

இளைஞர்கள் பாலத்தில் நின்று ஓடை நீரில் அசைந்து கொண்டிருக்கும் முட்டையோடுகளை சுடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் துப்பாக்கியால் முட்டையோடுகளை




சுட்டார்கள். ஆனால் அவர்கள் வைத்த குறி தவறி போயிற்று. ஒரு முட்டையோட்டை கூட அவர்களால் சுட முடியவில்லை.

இளைஞர்களின் இந்தச் செயலை விவேகானந்தர் பார்த்தார். இவர்களால் இந்த முட்டையோடுகளை சுட முடியவில்லையே என்று நினைத்தார். அதனால் அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இதை அங்கிருந்த இளைஞர்களில் ஒருவன் கவனித்தான்.

அவன் விவேகானந்தரிடம், பார்ப்பதற்கு இந்த முட்டையோடுகளை சுடுவது சுலபமான செயல் போன்று தெரியும். ஆனால் நீங்கள் நினைப்பது போல், இந்த முட்டையோடுகளை சுடுவது அவ்வளவு சுலபமான செயல் அல்ல. நீங்களே முயற்சி செய்து பாருங்கள். அப்போது உங்களுக்கே தெரியும் என்று கூறினான்.

சுவாமி விவேகானந்தர் துப்பாக்கியை கையில் எடுத்தார். அங்கிருந்த முட்டையோடுகளை குறி வைத்து சுட ஆரம்பித்தார். அப்போது அங்கே பன்னிரெண்டு முட்டையோடுகள் நீரோடையில் மிதந்து கொண்டிருந்தன.

விவேகானந்தர் வைத்த குறி ஒன்று கூட தவறவில்லை. வரிசையாக அவர் ஒவ்வொரு முட்டையோடாக சுட்டார். அங்கிருந்த அத்தனை முட்டையோடுகளும் வெடித்து சிதறின. இதைப் பார்த்த அங்கிருந்த இளைஞர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். அவர்கள் விவேகானந்தரிடம் நீங்கள் துப்பாக்கி சுடுவதில் ஏற்கெனவே நல்ல பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். அதனால் தான் நீங்கள் அத்தனை முட்டையோடுகளையும் ஒரு குறி கூடத் தவறாமல் சுட்டீர்கள் இல்லையா? என்று வினவினார்கள். அதற்கு விவேகானந்தர்




என் வாழ்நாளில் இன்று தான் நான் முதன்முறையாகத் துப்பாக்கியை தொடுகிறேன் என்றார். அவர் கூறியதை இளைஞர்களால் நம்ப முடியவில்லை.

அவர்கள், அப்படியானால் ஒரு குறி கூட தவறாமல் உங்களால் எப்படி மண்டையோடு களைச் சுட முடிந்தது? என்று கேட்டார்கள். அதற்கு விவேகானந்தர் எல்லாம் மனதை ஒரு முகப்படுத்துவதில் தான் இருக்கிறது. மனதை ஒருமுகப்படுத்தி செய்யும் எந்தச் செயலும் வெற்றியைத் தரும் என்று பதிலளித்தார்.

இளைஞர்கள் நாட்டின் தூண்கள். இளைஞர்கள் எதையும் துணிந்து செய்பவர்கள். இளைஞர்கள் எழுச்சி மிக்கவர்கள். இத்தகைய இளைஞர்களை நினைவு கூர்ந்து 1985 -ம் ஆண்டு முதல் சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளான ஜனவரி 12-ம் நாள் தேசிய இளைஞர் தினமாக இந்தியா முழுவதும் கொண்டாடப் படுகிறது.

இளைஞர்களே, நீங்கள் மகத்தான பணியை செய்ய பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள். உலக வரலாறு என்பதே தன்னம்பிக்கை கொண்ட சிலரின் வாழ்க்கை தான். வெற்றி வாசல் கதவை தட்டும் வரை அயராது உழையுங்கள். இலட்சியத்தில் உறுதியும் தூய்மையான நோக்கமும் இருந்தால் எதையும் வெற்றி கொள்ளலாம். சுமைகளை கண்டு துவண்டு விடாதீர்கள். இந்த உலகத்தை சுமக்கும் பூமியே உங்கள் காலடியில் தான் உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். கனவுகளை துரத்தி செல்லும் பொழுது காயங்கள் அடைவது எளிது. காயங்கள் கண்டு கலங்கி நின்றால் கண்ட கனவில் வெற்றி பெற முடியாது. கடைசி வரை முயற்சியும் பயிற்சியும் செய்யுங்கள். நம் தவறுகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடமே நம்மை உயர்வான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும்.

**தோல்விகளை தோளில் சுமக்காமல்**
**சட்டென்று தூக்கி எறிந்து விடு!**
**தூக்கத்திலும் உன் இலட்சியம் வெல்ல**
**துடித்து கொண்டிரு நண்பா!**
**இளைஞர் தின நல்வாழ்த்துக்கள் !**

திருமதி. **J. ஷீஜா**
*அமைப்பாளர், நடைக்காவு,*
*சூரியகோடு கிளஸ்டர்*

# சிறப்பு உதவித் தொகை வழங்குதல்

மிட்ஸ் தளிர்கள் உலக திட்டத்தில் பயன்பெற்று வரும் பயனாளிகளுக்கு 07.02.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து சிறப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது. மாணவர்களின் கல்வி மட்டுமல்லாது அவர்களின் குடும்பங்களும் முன்னேற வெண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட உதவியாளர்கள் இந்த சிறப்பு உதவித் தொகையினை வழங்கியுள்ளனர். ஒரு சிலருக்கே கிடைக்கும் இந்த வாய்ப்பினை வேறு காரியங்களுக்கு பயன்படுத்தாமல், சிறு தொழில் துவங்கி குடும்ப வருமானத்தை அதிகரிக்க பயன்படுத்த வேண்டும் என்றும், இதனை வழங்கிய உதவியாளர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும் என்றும் இயக்குநர் அவர்கள் கூறினார்கள். All for Life Life for All திட்டத்தின் வழியாக 55 பயனாளிகளுக்கு ரூபாய் 3,06,720/- மற்றும் Forderverein Indiensaar Hilfe e.V. திட்டத்தின் வழியாக 6 பயனாளிகளுக்கு ரூபாய் 32,800/-க்கான காசோலைகளையும் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் வழங்கினார்கள்.





## ஜோக்ஸ்

ஒருத்தரை சிரிக்க வைக்க முயற்சி செஞ்சேன்......
கொலை முயற்சின்னு உள்ளே தள்ளிட்டாங்க.
ஏன்?
பஸ்ஸில் தொங்கிட்டு வந்தவரை கிச்சு கிச்சு மூட்டக்கூடாதாம்

சாப்பிட வந்தவர் :
"என்னய்யா பேப்பர் ரோஸ்ட் கசங்கி இருக்கு?"
சர்வர் : "வேஸ்ட் பேப்பர்ல போட்டது சார்."

ஆசிரியர் : பாம்புகடிக்கு முதலுதவி என்ன தெரியுமா? கடிவாய்க்கு மேலும் கீழும் அழுத்தமாக ஒரு கயிற்றால் கட்டு போட வேண்டும்.
மாணவன் : தொண்டையில பாம்பு கடிச்சாலும் இதே மாதிரி செய்யலாமா சார்?
ஆசிரியர் : ??????????????????????

எங்கப்பா மாதிரி நானும் ஒரு கலெக்டர் ஆகணும்னு ஆசைப் பட்டேன்.
"அப்படின்னா , உங்கப்பா கலெக்டரா?"
"இல்லை..... அவரும் கலெக்டர் ஆகணும்னு தான் ஆசைப்பட்டாராம்!.

# தேடாத போது கிடைப்பதும், தேடும் போதும் தொலைவதும்...



ஒரு கடற்கரை இருந்தது. அந்த கடற்கரைக்கு பக்கத்தில் ஒரு குகையும் இருந்தது. அந்த கடற்கரைக்கு யாரும் பெரிய அளவில் வருவதில்லை. ஒதுக்குப்புறமான இடத்தில் ஆள் அரவமில்லாத அந்த குகைக்குள் வர அனைவரும் தயங்குவார்கள். வாழ்க்கையில் விரக்தி அடைந்த ஒரு இளைஞன் தனிமையில் இருக்க விரும்பி அந்த கடற்கரைக்கு வந்த போது அங்கிருக்கும் குகையை காண்கிறான். குகையை பார்க்கும் ஆவலில் குகைக்குள் சென்று சுற்றி பார்க்கிறான். சற்று நேரம் அமர்ந்து விட்டு திரும்பும் வேளையில் ஒரு பாறை இடுக்கிற்கு அருகில் ஒரு பை இருப்பதை பார்க்கிறான். உடனே அதில் என்ன இருக்கிறது என்று எடுத்து பார்க்கிறான். பை முழுவதும் களிமண் உருண்டைகள் இருப்பதை பார்த்த இளைஞனுக்கு வியப்பு மேலிட்டது. ஏனெனில் அக்கம் பக்கம் வீடுகள் இல்லை. குழந்தைகளும் விளையாட வர வாய்ப்பில்லை. அப்படி இருக்கும் நிலையில் யார் இந்த களிமண் உருண்டைகளை வைத்திருப்பார்கள் என்ற சிந்தனையோடு களிமண் உருண்டைகள் இருந்த பையை கையில் எடுத்துகொண்டு நடக்க துவங்கினான் அந்த இளைஞன்.

தென்றல் காற்று தாலாட்ட, கடற்கரை யோரமாக நடந்து வருகிறான். கையில் களிமண் உருண்டைகள். மறுபக்கம் தண்ணீர். பொதுவாகவே நம் கையில் கல்லும் அந்த பக்கம் தண்ணீரையும் கண்டால் உடனே கல்லை எடுத்து தண்ணீரில் தானே போடுவோம். அது போல அந்த இளைஞனும் தண்ணீரை கண்டவுடன் தனது கையில் இருந்த களிமண் உருண்டைகளை ஒவ்வொன்றாக தண்ணீரில் எறிய ஆரம்பித்தான். எறிந்தவாறே தென்றல் காற்றை சுவாசித்தவாறு கடற்கரை வழியாக நடந்து செல்கிறான். மூன்று உருண்டைகளே எஞ்சியிருந்த நிலையில் அடுத்ததாக எறிய ஒரு களிமண் உருண்டையை எடுத்த போது அதில் ஒரு வெடிப்பு இருந்தது. அந்த வெடிப்பின் காரணமாக அந்த களிமண் உருண்டை உடைந்து விடுகிறது. உடைந்த களிமண் உருண்டைக்குள் ஏதோ மினுமினு வென தென்பட அதைப் பார்க்கும் இளைஞன் அதிர்ந்து போகிறான். ஆம், அது ஒரு அழகான இரத்தினக் கல். அடடா களிமண் உருண்டை என நினைத்தால் இரத்தினக்கல்லா இருந்திருக்கே என நினைத்து கொண்டே மீதமிருந்த இரண்டு உருண்டைகளையும் உடைத்து பார்க்கிறான். அவைகளுக்குள்ளும் இரத்தினக் கற்கள் இருந்தன. இவ்வளவு நேரமும் அவன்




யோசிக்காமல் தூக்கி எறிந்த அனைத்து உருண்டைகளுக்குள்ளும் இரத்தின கற்களே இருந்துள்ளன. எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம் விலையுயர்ந்த இரத்தினக் கற்களை வெறும் களிமண் உருண்டைகள் என நினைத்து தூக்கி எறிந்து விட்டோமே என நினைத்து வேக வேகமாக கடலுக்குள் இறங்கி தேடிப் பார்க்கிறான். அங்கு களிமண் உருண்டையையும் காணோம். இரத்தினக் கல்லையும் காணோம். ஆனாலும் ரொம்ப நேரம் அந்த இளைஞன் கடற்கரை மணலில் தேடிக் கொண்டிருந்தான்.




இந்த கதையில் களிமண் உருண்டைகள் என்பது வாய்ப்புகள். நமக்கு கடவுள் கொடுக்கும் வாய்ப்புகள் பல நேரங்களில் நேரடியாக கிடைப்பதில்லை. மாறாக இரத்தினக் கற்கள் எப்படி களிமண் உருண்டைக்குள் ஒளிந்து இருந்தனவோ அதே மாதிரி தான், நமக்கு கிடைக்கும் வாய்ப்புகள் மேலோட்டமாக பார்க்கும் போது கடினமானதாகவும், சாதாரணமானதாகவும் தெரியும். அதை நாம் ஆராய்ந்து தெரிந்து கொண்டு பயன்படுத்தும் போது தான் அது இரத்தினக்கல்லாக மாறும். ஆனால் நாம் பல நேரங்களில் சாதாரண மானது என்றும் கடினமானது எனவும் காரணம் காட்டி பல விஷயங்களை தவற விடுகிறோம். அதிகமாக இருக்கிறது என்று நேரத்தை, சாதாரணமாக கிடைத்ததென்று உறவுகளை, சாதாரணமாக இருக்கிறது என்று வாய்ப்புகளை இப்படி எத்தனையோ விஷயங்களை மேலோட்டமாக பார்த்து ரொம்ப சாதாரணமாக இருக்கிறது என்று குறைவாக எடை போட்டு அதை சரியாக பயன்படுத்தாமல் விட்டு விடுகிறோம். நமக்கு கொடுக்கப்பட்ட சாதாரணமான விஷயங்கள் இன்னொரு நபருக்கு கொடுக்கப்பட்டு அந்த நபர் அதை பயன்படுத்தி உயர்வடையும் போது தான் நாம் நம்முடைய தவறை உணர்ந்து வருந்தி கொள்கிறோம். நீங்களும் ஒரு வேளை உங்கள் கரங்களில் இருக்கும் வாய்ப்புகளை சாதாரணமானதாக, முக்கியத்துவம் கொடுக்காமல் வெறும் களிமண் உருண்டையாக நினைத்தீர்க ளானால், இன்றே அந்த களிமண் உருண்டையை உடைத்து பாருங்கள். நிச்சயமாக அதற்குள் ஒரு இரத்தினக்கல் இருக்கும். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்க்காமல், கடலுக்குள் தூக்கி எறிந்தோமானால் அதை மறுபடி தேடி எடுக்க முடியாது. வாய்ப்புகளின் மதிப்பை உணர்ந்து கொள்வோம் வாழ்வில் உயர்வடைவோம்.







**ஜினிஷா,**
வகுப்பு : XII, பல்லுக்குழி

# வழிகாட்டுதல் கூட்டம்

தளிர்கள் உலக திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட பயனாளிகளுக்கான வழிகாட்டுதல் கூட்டம் 09.02.2022 அன்று இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் தளிர்கள் உலக திட்டத்தின் ஒழுங்குமுறைகள் குறித்து ஒளிபடம் வாயிலாக விளக்கமளித்தார்கள். பின்னர் 68 பயனாளிகளுக்கு வங்கி கணக்கு தொடங்கப்பட்டு தளிர்கள் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.





24.02.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக 17 மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 85 உறுப்பினர்களுக்கு ரூபாய் 25,50,000/- கடனாக வழங்கப்பட்டது.

20.01.2022 அன்று குடும்ப வளர்ச்சி திட்டத்தின் கூட்டமைப்பு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. Fr. ஜாண்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இத்திட்டத்தின் முன்னோக்கிய செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது.



02.02.2022 & 04.02.2022 ஆகிய தினங்களில் மிட்ஸ் உறுப்பினர் நலத்திட்டத்தின் வழியாக ஆற்றூர் மற்றும் நடைக்காவு கிளஸ்டர்களில் உள்ள இரண்டு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 20,000/- இறப்பு நிதியாக வழங்கப்பட்டது.



03.02.2022 அன்று திருச்சி தமிழக சமூகப் பணி மையத்தில் வைத்து நடைபெற்ற CEI/ Migration Launch & Project Orientation கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், அமைப்பாளர்கள் திருமதி. R. ஷகிலா, திருமதி. P. றீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.



05.02.2022 அன்று CCI குழந்தைகள் நல திட்டத்தின் ஒரு பகுதியாக சூழால் பஞ்சாயத்தில் வைத்து குழந்தைகள் பாராளுமன்ற கூட்டம் நடத்தப்பட்டது. குழந்தைகள் பாராளுமன்றத்தின் நோக்கம், செயல்படுத்தும் விதம் மற்றும் அவற்றால் கிடைக்கும் நன்மைகள் குறித்து ஒருங்கிணைப்பாளர் திருமதி.வினிதாராணி அவர்கள் விளக்கமளித்தார்கள். இக்கூட்டத்தில் சூழால் பஞ்சாயத்துக்குட்பட்ட 31 குழந்தைகள் கலந்து கொண்டனர்.





## அழகு குறிப்புகள்

- தக்காளி பழத்தை நன்கு அரைத்து அந்த விழுதை முகத்தில் தடவி அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் பளபளப்பாகும். எண்ணெய் வடிதலை கட்டுப்படுத்தும்.
- அடிக்கடி மருதாணி இலைகளை அரைத்து கைகளில் பூசி வந்தால் உடல் வெப்பம் குறையும். மேலும் தூக்கம் இன்மையால் அவதிபடுபவர்கள் மருதாணி இட்டுக் கொள்வதால் மன அழுத்தம் குறைந்து நன்றாக தூக்கம் வரும்.

**திருமதி. A. ஷிஜி**
*மிட்ஸ் வரவேற்பாளர்*

மிட்ஸ் ஆதிச்சவிளாகம் கிளஸ்டரில் உள்ள மிட்ஸ் கோல்டு சுய உதவி குழு உறுப்பினர் களுக்கு ஐசிஐசிஐ வங்கி கடனாக ருபாய் 3,60,000/- வழங்கப்பட்டது. அதற்காக ஐசிஐசிஐ வங்கி அலுவலர் திரு. அனிஷ் அவர்கள் மிட்ஸ் கோல்டு குழு உறுப்பினர்களை பார்வையிட்டு மதிப்பீடு செய்தார்கள்.



# குறுக்கெழுத்துப்போட்டி

**உங்கள் அறிவிற்கு ஒரு சவால்**

**இடமிருந்து வலம்**

1. உலகிலேயே மிக நீளமான நீர்வீழ்ச்சி எது?(4)
2. ஒரு தலைமுறை சுமார் எத்தனை ஆண்டுகளை குறிக்கும்?(2)
3. மீன்கள் இல்லாத ஆறு எது? (4)
4. சிங்கப்பூரின் பழைய பெயர்?(4)
5. பெருங்காயம் எந்த செடியிலிருந்து வெளிவரும் திரவ பொருள்?(3)
6. எந்த நாட்டில் அதிக அளவு ஆட்டோக்கள் தயாரிக்கப்படுகின்றன?(4)
7. Calculator என்ற ஆங்கில சொல்லுக்கு சரியான தமிழ்ச் சொல்? (5)
9. மகாபாரதப்படி துரியோதனன், பீமன் இவர்களுக்கு கதாயுதம் பயிற்சி அளித்தவர்?(5)
22. மாவீரன் நெப்போலியன் எங்கு பிறந்தார்?6)

**கீழிருந்து மேல்**

18. போலியோ தடுப்பு மருந்தை கண்டுபிடித்தவர்?(7)
14. சமையல் சோடாவும், டார்டாரிக் அமிலமும் கலந்த கலவை?(5)
15. இந்தியா முதல் அணுகுண்டு சோதனை நடத்திய இடம் எது?(4)
23. பரதநாட்டியம் கைவினை அமைந்துள்ள நடராஜரின் புகழ்பெற்ற கோயில் எங்கு உள்ளது?(6)
24. அமர்நாத் குகைகள் எங்குள்ளன?(4)
21. கூடு கட்டும் ஒரே பாம்பு?(5)
11. எந்த தாவரத்தின் விதைப்பகுதி உணவாக பயன்படுகிறது?(3)
25. புத்தர் பிரசங்கிக்க எந்த மொழியை பயன்படுத்தினார்?(2)
17. உலகின் முதல் நாணயம் எது?(4)

**மேலிருந்து கீழ்**

8. கருப்பு நிற மட்பாண்டங்கள் கிடைக்கும் இடம்? (6)
12. ஷிராஜேந்த் என்று அழைக்கப்பட்ட நகரம் எது? (4)
13. காசநோயால் பாதிக்கப்படும் உடல் உறுப்பு?(5)
16. லேசான உலோகம் எது?(5)
10. இதய துடிப்பை கேட்க பயன்படும் கருவி?(6)
19. ரஷிய பாராளுமன்றத்தின் பெயர்?(2)
20. தட்டச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தவர்?(3)
21. மன்னன் ஆங்கில பெயர்?(2)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | 3 | | | |
| 4 | | | | 5 | | | | | |
| 6 | | | | 7 | | | | | |
| 8 | 9 | | | | | 10 | 11 | | |
| | 12 | | | 13 | | | | 14 | |
| | | | 15 | | | | | 16 | |
| | | | | | 17 | | | | 18 |
| | | | | | 19 | | | | 20 |
| | ■ | | | | | | 21 | | |
| 22 | | 23 | 24 | | | 25 | | | |

**குறிப்பு :** சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் ஏப்ரல் 30, 2022. அதற்கு பின் வரும் விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தில் விடைகளை எழுதி கட் செய்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**முகவரி :** ஆசிரியர், ஐக்கியசுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629163, தமிழ்நாடு.

**டிசம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியில் பங்கு பெற்றோர்**

திருமதி.T. நிர்மலா, தாளான்காலை சுய உதவிகுழு, நடைக்காவு கிளஸ்டர்
திருமதி. சரஸ்வதி, மிட்ஸ் வாணியன்விளைII சுய உதவிகுழு, குழித்துறை கிளஸ்டர்
திருமதி.T. நிஜா, மிட்ஸ் ராஜீவ்காந்தி நகர் சுய உதவிகுழு, ஆற்றூர் கிளஸ்டர்

**டிசம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்**

திருமதி. S. ஷீலா, மிட்ஸ் தெறும்பு தட்டு விளை சுய உதவிகுழு, ஆற்றூர் கிளஸ்டர்

**பரிசுகள் ஆண்டிறுதியில் வழங்கப்படும்.**

**போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பெற்ற அனைத்து சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்கள் ஆதரவினை வேண்டுகிறோம்.**







பீன்ஸ் அடிக்கடி எடுத்து கொள்பவர்களுக்கு நுரையீரல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவது குறைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# புற்றுநோயில்லா உலகம் படைத்திட...





ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 04-ம் தேதி உலக புற்றுநோய் விழிப்புணர்வு தினமாக உலகெங்கும் அனுசரிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை மையமாக வைத்து உலக மக்களுக்கு புற்று நோய்க்கான விழிப்புணர்வு அளிக்கப்பட்டு புற்றுநோயை கட்டுக்குள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நமது மிட்ஸ் நிறுவனம் காரிதாஸ் இந்தியாவுடன் இணைந்து எழுவோம் இயக்கம் என்ற பெயரில் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் விழிப்புணர்வு கூட்டங்கள், பேரணிகள், பிரச்சாரங்கள் வழியாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கி வருகிறது. அத்துடன் மிட்ஸ் ஜீவன் என்ற திட்டத்தின் வழியாக மிட்ஸ் பணிமண்டலங்களுக்கு உட்பட்ட



பகுதிகளில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவ செலவிற்கு உதவி தொகையும் வழங்கி வருகிறது. இந்த ஆண்டு பிப்ரவரி 27-ம் தியதி அனைத்து மிட்ஸ் மற்றும் கோல்பிங் சுய உதவி குழுக்களில் வைத்து மாலை 4 மணி முதல் 5 மணி வரை புற்றுநோய் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டது. இக்கூட்டங்களில் புற்றுநோய் ஏற்பட காரணங்கள், அவற்றின் பரவும் தன்மை, ஆரம்ப கால அறிகுறிகள், தடுக்கும் முறைகள், சிகிட்சை முறைகள் போன்ற விபரங்கள் அடங்கிய நோட்டீஸ் வழியாக அனைத்து உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு அளிக்கப்பட்டதுடன் புற்றுநோய் எதிர்ப்பு உறுதி மொழியும் எடுக்கப்பட்டன. இந்த கூட்டங்கள் வழியாக சுமார் 9000 -க்கும் மேற்பட்ட மிட்ஸ் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்க முடிந்தது.

இந்த விழிப்புணர்வு கூட்டங்களில் ஏராளமான அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், வார்டு உறுப்பினர்கள், மருத்துவர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் கலந்து கொண்டு மக்களுக்கு புற்றுநோய் விழிப்புணர்வு குறித்த செய்திகளை வழங்கினார்கள்.










# வாசகர்கள் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால் அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## இதழின் கடைசி பக்கம்

அரை பக்கத்திற்கு கட்டணம் : Rs.1000/-
முழு பக்கத்திற்கும் கட்டணம் : Rs. 2000/-

## கடைசி பக்கத்தின் உள் பகுதி

அரை பக்கத்திற்கு கட்டணம் : Rs. 500/-
முழு பக்கத்திற்கும் கட்டணம் : Rs. 1000/-

## பிறந்த நாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள்

கால் பக்கத்திற்கு கட்டணம் : Rs. 250/-
அரை பக்கத்திற்கு கட்டணம் : Rs. 500/-
முழு பக்கத்திற்கும் கட்டணம் : Rs. 1000/-

*விளம்பரங்கள் வெளியிட விரும்புபவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புக்கள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

### மிட்ஸ் அலுவலகம்

இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல்
கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email : mids.marthandam@gmail.com Website : www.mids.org.in
Ph : 04651 - 263390, 295690



Mob:8754700730
9344241136

Pro. M. Mugesh M.Sc.
M. Chandru B.E.
M. Ram Kumar B.E.

MUMMY DADDY
HEAD LIGHT RESTORATION
ஹெட்லைட் மறுசீரமைப்பு

EB Quarters Opp. Near Four Way & Karur Vysys Bank ATM
Paramarthalingaupram, Mahadanapuram Post, Kanyakumari Dist - 629702.

FLIM COATING WITH NANO TECHNOLOGY






Satisfaction is guaranteed

Cell : 9843114056
: 9843714058

Mummy Daddy
WEDDING AND EVENT MANAGEMENT

A to Z Service for weddings and events
Decoration | Sounds and Lightings
| pandel | DJ | Catering Service | Photography
| Welcome Complements | Travels
| Corporate Events | Makeup | Cakes

*12/121, College Road, Kottaram, Kanyakumari Dt.- 629 703.*
*E-mail : mummydaddyktm@g.mail.com*


With Best Compliments From
SURAJ
constructions
We deals with consultation, construction and designing of
• Churches
• Shrines
• Chapels
• Auditoriums
• School
• Residential buildings
• Shopping complexes
• And other buildings
Consulting engineer
KP. Francis Raj
Nellimoottu Palavilai, Palavilai post, Kollencode
Ph no. 9447395559
Nanjil Offset, Nagercoil. ✆ : (04652) 233853